# கேரி தமிழ்ப்பள்ளி

கேரி, வடகேரொலைனா, அமெரிக்கா

https://www.carytamilschool.org


# செய்தியிதழ்

ஆனி 2017

*மலர் 2* | *இதழ் 3*


## *முதல்வரின் மனதிலிருந்து...*

### *திரு. செல்வன் பச்சமுத்து*



எமது தமிழ்ப்பள்ளியின் இக்கல்வியாண்டின் மூன்றாவதும் இறுதியுமான செய்தியிதழ் வெளிவருவதில் நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இவ்வாறு செய்தியிதழை தொடர்ந்து வெளியிடுவது மிகவும் கடினமான செயல் ஆகும். அதற்காக உழைத்த செய்தியிதழ்க் குழுவை முதலில் பாராட்டுகிறேன்.

நான் தொடர்ச்சியாக மாணவர்களின் பாதுகாப்புப் பற்றி செய்தியிதழ்களில் குறிப்பிடுகிறேன். ஆபத்து வருமுன் தடுக்க வேண்டும் என்பதே எமது எண்ணமாகும். அதன் ஒரு பகுதியாக கடந்த 04.31.2017 அன்று தீ பாதுகாப்பு பயிற்சி நடத்தப்பட்டது. அபாயச் சங்கு ஊதப்பட்டதும் மாணவர்களும், ஆசிரியர்களும், ஏனையோரும் ஒழுங்கான முறையில் மிக விரைவாகவும் எச்சரிக்கையுடனும் வகுப்பறைகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றனர். இச் செயற்பாடு எமக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. மாணவர்களைப் பாதுகாப்பாக வைத்திருந்தால்தான் அவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்க முடியும். எனவே பாதுகாப்பை பள்ளியின் பொறுப்பிலேயே விட்டுவிடாமல், பெற்றோரும் வீடுகளில் அது பற்றிய அறிவுறுத்தல்களைக் கொடுத்து மாணவர்களை எந்த நிலையிலும் ஆயத்தமாக வைத்திருக்க வேண்டும்.

மாணவர்கள் தற்போது தமது கல்வியாண்டை முடித்துள்ளார்கள். அவர்களை அடுத்த நிலைக்கு தயார் செய்ய ஆசிரியர்களும் நிர்வாகமும் தன்னலமின்றி சேவை செய்துள்ளனர். இவர்களுடன் பல பெற்றோர்கள் கிழமைதோறும் தன்னார்வலர்களாக வந்து எமக்கு எல்லாவித ஒத்துழைப்பும் கொடுத்துள்ளனர். அவர்கள் எல்லோரையும் பாராட்டுவதோடு, அவர்களுக்கு நன்றியையும் கூறுகிறோம். ஆசிரியர்களுக்கு நன்றி கூறும் விதமாக அவர்களுக்கான விருந்துபசாரம் 03.26.2017 அன்று நடத்தப்பட்டது.

மேலும் ஆசிரியர்களுக்கான தொழில்சார் பயிற்சிப்பட்டறையொன்று 05.21.2017 அன்று நடத்தப்பட்டது. அதற்கான பயிற்சியாளராக ஈலோன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியையான நினா நமஸ்தே என்பவர் அழைக்கப்பட்டிருந்தார். அவர் மிகவும் சிறப்பாக பயிற்சிகளை வழங்கியதோடு, ஆசிரியர்களுக்கு பலவித பரிந்துரைகளையும் வழங்கினார். அவர் தொடர்ந்து வந்து மேலும் பயிற்சிகள் வழங்குவேன் என்று கூறியது எமக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆசிரியர்களுக்கு இவ்வாறான பயிற்சிகளை வழங்குவதன்

*தொடர்ச்சி பக்கம் 3 இல் .........*

## இதழாசிரியரின் இதயத்திலிருந்து …

### கலாநிதி. நாகலிங்கம் சிவயோகன்

எமது இக்கல்வியாண்டின் முதலாவது செய்தியிதழ் 01.15.2017 அன்று வெளிவந்தது. தொடர்ந்து இரண்டாவது செய்தியிதழ் 03.29.2017 அன்று வெளிவந்தது. தற்போது மூன்றாவது செய்தியிதழும் 06.04.2017 அன்று வெளி வருகிறது. இவை அனைத்தும் மிகவும் சிறப்பாக வெளிவர உழைத்த செய்தியிதழ்க் குழுவினர் அனைவருக்கும் முதலில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். எமக்கு கிடைத்த பலவித பின்னூட்டங்களின் அடிப்படையில் ஒவ்வொரு இதழையும் முடிந்த வரை சிறப்பாக மெருகூட்டித் தயாரித்து வெளியிட்டுள்ளோம்.

மாணவர்களுக்கு செய்தியிதழ் பற்றி பெற்றோர்கள் தெரியப்படுத்துவது மிகவும் குறைவாகவுள்ளது. பல மாணவர்களுக்கு செய்தியிதழ் வெளிவருவது தெரியாமலே உள்ளது. இந்த நிலை மாற வேண்டும். எனவே பெற்றோர்களே செய்தியிதழையும் பள்ளியின் வீட்டுப்பாடங்கள் போன்று நகல் எடுத்து மாணவர்களுக்குக் கொடுத்து அவர்களை வாசிக்கும்படி ஆர்வமூட்டுங்கள். இதனை வெளியிடுவதற்கு நாம் மிகவும் சிரமப்பட்டு எமது நேரத்தை செலவு செய்கிறோம். அதற்குரிய பலன் மாணவர்கள் இதனைப் படிக்கும்போதே நமக்குக் கிடைக்கிறது. எமது மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள் இதனைப் படிக்கிறார்களோ இல்லையோ சில வெளியாட்களும், வேறு நாட்டவரும் படித்து பின்னூட்டங்கள் அளிப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

இவ்விதழில் பள்ளி முதல்வரின் செய்தியுடன், வகுப்புச் செய்திகள், மற்றும் பள்ளியில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகள் பற்றிய செய்திகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அந் நிகழ்வுகளின் ஒளிப்படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் பள்ளியில் தொண்டு செய்யும் பெற்றோர்கள், தமிழ் கற்கும் வேற்று இனத்தவரின் அனுபவங்கள், மற்றும் ஆசிரியர் பயிற்சிகள் சம்பந்தமான செய்திகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இச் செய்தியிதழ் சம்பந்தமான தங்களின் கருத்துக்களை எமக்கு அனுப்பி வையுங்கள். அடுத்த ஆண்டு வேறு குழுவினர் செய்தியிதழை வெளியிடுவார்கள். எமக்கு இதுவரை கொடுத்த ஆதரவுக்காக தங்களுக்கு நன்றி கூறுவதோடு, தொடர்ந்து அடுத்த செய்தியிதழ்க் குழுவினருக்கும் ஆதரவு நல்க வேண்டுகிறோம். ♠

தொடர்பு மின்னஞ்சல்: nsivayogan@gmail.com

*****

*****

## செய்தியிதழ்க் குழு 2016 -2017

முனைவர். காசி அழகானந்தம்
திரு. தி. வெ. ராமசுப்ரமணியன்
திரு. செல்வன் பச்சமுத்து
திருமதி. இரம்யா வரதராஜன்
முனைவர். இளங்கோவன் கோபால்
திருமதி. சர்மிளா குமார்
திருமதி. விஜயலட்சுமி செல்வக்குமார்
திரு. அசோக் நாகராஜன்

*****

## *முதல்வரின் மனதிலிருந்து..... தொடர்ச்சி*

மூலம் எமது பள்ளியின் தரம் மேலும் உயர்ந்து செல்லும். அவருக்கு எமது பள்ளி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

இந்தக் கல்வியாண்டுக்கான ஆண்டு மலர் உங்கள் கைகளில் மிக விரைவில் கிடைக்கவுள்ளது. அதற்காக ஒளிப்படங்களும் 03.19.2017 அன்று எடுக்கப்பட்டன. ஆண்டுமலரை வெளியிட மிகவும் கடுமையாக உழைத்த திரு. அசோக் நாகராஜன் அவர்களுக்கு நாம் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் திரு. தருமர் மற்றும் முனைவர் தணி சேரன் இருவரும் நமது ஆசிரியர்களின் கற்பித்தல் செயல்பாடுகளை அவர்களின் வகுப்பிலே அமர்ந்து அவதானித்து, அவற்றைக் குறிப்பு எடுத்தார்கள். பின்னர் அவற்றை ஆய்வு செய்து தமது பரிந்துரைகளை ஆசிரியர்களுக்கு எடுத்துரைத்துக் கலந்துரையாடினார்கள். இது ஆசிரியர்களை உற்சாகப்படுத்தியது. அத்துடன் பள்ளியின் நிர்வாக உறுப்பினர்களும் பலவிதத்திலும் பள்ளி சீராக நடைபெற உதவினார்கள். அனைவருக்கும் பள்ளி நன்றி கூறுகிறது.

நாம் இந்தக் கல்வியாண்டை மிகவும் சிறப்பாக செய்து முடித்துள்ளோம். மாணவர்கள் தொடர்ந்து தமது தமிழ் கற்றலை சிறப்பாக செய்து, மீதமுள்ள கல்வியாண்டுகளையும் முடிக்க அனைவரும் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கோடை விடுமுறையில் மாணவர்களுக்கு தமிழில் பேச ஆர்வமூட்டுங்கள். தமிழ்ப் பாடல்களைக் கேட்கவும், தமிழ்த் திரைப்படங்களைப் பார்க்கவும் ஊக்குவித்து, அவர்களைத் தமிழ்ச் சூழலில் வைத்திருங்கள். தமிழின் பெருமைகளை எடுத்துக்கூறி அவர்களைப் பெருமிதம் கொள்ள வையுங்கள். அப்போதுதான் அவர்கள் அடுத்த கல்வியாண்டுக்கும் ஆர்வத்துடன் பள்ளிக்கு வருவார்கள்.

எமது பள்ளியின் செயற்பாடுகள் சம்பந்தமான உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு உடனுக்குடன் தெரியப்படுத்துங்கள் அப்போதுதான் நாம் மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்க முடியும். ♠

தொடர்பு மின்னஞ்சல்: cts.principal@yahoo.com

*****

## *பள்ளியின் தன்னார்வலர் படை*

***கலாநிதி. நாகலிங்கம் சிவயோகன்***
***இதழாசிரியர்***

பல பெற்றோர்கள் தமிழ்ப்பள்ளியின் அனுமதியின் போதான முந்நிபந்தனையால் ஒரு கல்வியாண்டில் ஆகக் குறைந்தது இரு தடவையாவது பள்ளியில் தன்னார்வலராக வருவார்கள். தமது கடமை எப்பொழுது முடியுமென்று பரபரப்பாக இருந்து விட்டு, பள்ளி விட்டதும் சென்று விடுவார்கள். அமெரிக்காவின் பரபரப்பான வாழ்க்கையில் இது சாதாரணமானதுதான். குறைகூற முடியாது. ஆனால் இந்தப் பரபரப்பான வாழ்க்கைக்குள்ளும் முழு விருப்பத்துடன் தினமும் பள்ளிக்கு வந்து தாமே வேலைகளைப் பொறுப்பேற்றுச் சேவை செய்யும் சில தன்னார்வலர்களும் உள்ளனர். அவர்களைப் பற்றி சிறிதளவேனும்

எழுதாவிட்டால் நாம் பெரும் தவறு செய்தவர்களாகிவிடுவோம்.

நாம் பெரும்பாலும் தமிழகத்தில் இருந்தோ அல்லது இலங்கையில் இருந்தோ வந்துள்ளோம். எமது கலாசாரத்தின்படி சில வேலைகளைச் செய்வதை இழிவாகக் கருதுவோம். அந்த வேலைகளையும் இன்முகத்துடன் செய்பவர்களைப் பார்த்து நான் மிகவும் வியந்துள்ளேன். ஆசிரியர்களுக்கான விருந்துபசாரம், தமிழ்மழை, மற்றும் போட்டி நிகழ்வுகள் போன்றவை முடிந்த பின் சாப்பாட்டுத் தட்டுக்களை எடுத்துப்போட்டு, இடத்தை இன்முகத்துடன் சுத்தம் செய்து ஒப்படைக்கும் தன்னார்வலர்களுக்கு எத்தனை முறை நன்றி சொன்னாலும் போதாது.

ஒவ்வொரு வகுப்பு நாட்களின் போதும் வாசலில் வெய்யிலோ, மழையோ அல்லது குளிரோ எதுவென்றாலும் நின்று வாகனங்களின் கதவைத் திறந்து விடுபவர்களை எந்தப் பெற்றோர்களாவது நன்றியுடன் பார்த்துள்ளீர்களா? ஆசிரியர்களுக்கான பயிற்சி நடைபெற்ற நாளொன்றில் வாசலில் நின்று கதவைத் திறந்து விட்டு "இன்று பள்ளி 2.45 மணிக்கு முடியும் மறக்காமல் நேரத்துக்கு வாருங்கள்" என்று ஒவ்வொரு பெற்றோருக்கும் சொன்ன ஒருவரை கவனித்தேன். சிலை வைத்துப் போற்றலாம் என்று என் மனதில் தோன்றியது. இவற்றைவிட ஒவ்வொரு நாளும் வரவு எடுப்பது, புத்தகங்கள் கொடுத்து சேகரிப்பது, மற்றும் மாணவர்களை ஒழுங்கு படுத்தி விடுவது போன்றவற்றைச் செய்பவர்களும், இந்தத் தினமும் வரும் தன்னார்வலர்களேயாவர். ஏனைய தன்னார்வலர்களை வழிநடத்துபவர்களும் இவர்களே. அத்துடன் பள்ளியின் குழு ஒளிப்படங்கள், மற்றும் மாணவர்களின் நிகழ்வுகளை களைப்பின்றி காத்திருந்து ஒளிப்படம் எடுப்பதும் அவர்களில் சிலரே. மேலும் அவசரத்தில் அழைக்கும்போது மறுக்காமல் எந்த நேரத்திலும் பதில் ஆசிரியராக ஓடி வருபவர்களும் பலருள்ளனர். இவர்களில் யாருமே எனது நண்பர்கள் அல்ல. ஆனால் வகுப்பு நாட்களில் அவர்களை இரண்டு அல்லது மூன்று முறை பார்த்துப் பார்த்து மிகவும் நெருக்கமானவர்கள் என்ற உணர்வு மனதில் உண்டு. இவ்வாறு ஒவ்வொரு நாளும் வந்து அவர்கள் செய்யும் தொண்டு நான் செய்யும் ஆசிரியர் வேலையை விடவும் மேலாகப் போற்றப்பட வேண்டியதாகும். அவர்களை நன்றியுடன் இச் செய்தியிதழ் பாராட்டுகிறது. அவர்களில் சிலரின் ஒளிப்படம் இணைக்கப்பட்டுள்ளது. ♠

*****



*மோகன்ராஜ், நிர்மல், கார்த்திக், ஜெகதீசன், விஜயகுமார், தீபக், பரத்ராஜ், அருண்*

*****

## *கேரி தமிழ்ப்பள்ளியில் நமது அனுபவம்*

***ஏமி பெல்பர் (Amy Belfer), ஸ்ரைலிங் ரோர் (Styrling Rohr)***
***ஈலோன் பல்கலைக்கழக பட்டப்படிப்பு மாணவர்கள்***




2019 ஆம் ஆண்டு தொடங்கவுள்ள “பெரிகிளீன் அறிஞர்கள்” (Periclean Scholars) என்ற திட்டத்தின் கீழ் சேர இருக்கின்ற ஈலோன் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள் இந்த வருடம் முதல் கேரி தமிழ் பள்ளியில் சேர்ந்து தமிழ் பயில ஆரம்பித்துள்ளோம். நாங்கள் அனைவரும் இலங்கைக்கு சென்று அங்குள்ள மக்களுடன் சேர்ந்து பணியாற்ற உள்ளதால் தமிழ் மொழியைக் கற்க இந்தப் பள்ளியில் சேர்ந்துள்ளோம். நாங்கள் அங்கு சென்று அங்கு வாழும் மக்களின் இன்றைய நிலை குறித்தும், அங்கு நடைபெற்ற போரின் போது நிலவிய சூழ்நிலை குறித்தும் கலந்துரையாடி அவர்களின் அனுபவங்களைக் கேட்டு தெரிந்து கொள்ள இருக்கிறோம். எங்களுக்கு தமிழ் கற்றுக் கொடுக்க முன்வந்த கேரி தமிழ் பள்ளி, எங்களை அன்புடன் வரவேற்று ஏற்றுக் கொண்டது. எங்கள் ஆசிரியர் கலாநிதி. முரளீதரன் அவர்கள் மிக அருமையாகத் தமிழ் மொழியைக் கற்றுக் கொடுத்து நாங்கள் கேட்கும் பல கேள்விகளுக்குப் பொறுமையுடன் விடையளித்து எங்களை வழிநடத்தினார். இலங்கைக்கு சென்று, அம் மக்களுடன் தமிழில் அதிகமாக பேசி வேலை செய்ய உள்ளதால், நாங்கள் எழுத்துக்கள் மற்றும் இலக்கணம் தவிர்த்து, பேச்சுத் தமிழ் கற்பதில் தான் அதிகமாக கவனம் செலுத்தினோம். எங்களது ஆசிரியர், நாங்கள் நன்கு புரிந்து கொள்ளும் படியும், எங்களின் தேவை மற்றும் விருப்பத்திற்கு ஏற்றவாறும் பாடத்திட்டத்தை மிகவும் சிறப்பாக வடிவமைத்து கொடுத்திருந்தார். அவருடைய உதவியுடன், இலங்கைக்கு செல்ல உள்ள எங்கள் மாணவர்கள் குழுவிற்காக ஆவணம் ஒன்றை வகுப்பில் தயார் செய்தோம். அதில், அந் நாட்டில் அன்றாடம் பயன்படுத்தும் சொற்களும் அவர்கள் கலாசாரம் குறித்து சில சொற்களும் தொகுத்து வைத்துள்ளோம். நாங்கள் இத் தமிழ் பள்ளிக்கு வந்து இலங்கை நாட்டைப் பற்றி கேட்டு தெரிந்து கொண்ட அனைத்தையும், எங்களுடன் பயணிக்க உள்ள மற்ற மாணவர்களோடு வாரம் தோறும் பகிர்ந்து கொள்வோம். தமிழ் பள்ளிக்கு வந்து, அங்கு மக்களுடன் உரையாடுவது, இலங்கையில் உள்ள தமிழ் அனுபவங்களின் பன்முகத்தன்மை மற்றும் ஆழத்தை புரிந்து கொள்ள உதவியது. நாங்கள் நினைத்ததைவிட மிகக் குறைந்த காலத்திலேயே தேவையான தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டோம். இந்த தமிழ் பள்ளியில் வந்து தமிழ் கற்றுக் கொண்டது எங்களுக்கு மிகச் சிறந்த மற்றும் ஒரு புதுமையான அனுபவமாக இருந்தது. இங்கு கற்றுக் கொண்ட

விலைமதிப்பில்லா பல பாடங்களை இலங்கைக்கு செல்லும் போது மிகச் சரியாக பயன்படுத்திக் கொள்வோம். கேரி தமிழ் பள்ளியில் எங்களுக்கு உதவிய அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். ♠

*****

## ஆசிரியர்களுக்கான துறைசார் பயிற்சிப் பட்டறையின் பிரதிபலிப்பு



கேரி தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை யொன்று 05.21.2017 அன்று ஈலோன் பல்கலைக்கழக பேராசிரியையான நினா நமஸ்தே என்பவரால் நடத்தப்பட்டது. இங்கு ஆசிரியர் செல்வராஜ் கோட்டீஸ்வரன் தான் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார். இவையும் அன்று நாம் கற்ற வேறுவிடயங்களும் எமது ஆசிரியர்களின் கற்பித்தல் தரத்தை உயர்த்துவதோடு, பள்ளியின் தரத்தையும் உயர்த்தும் என்பதற்கு மாற்றுக் கருத்துக்கள் கிடையாது. தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்ட ஆசிரியரைப் பாராட்டுகிறோம். அத்துடன் நமது வேண்டுகோளை ஏற்று இங்கு வந்து பயிற்சிப்பட்டறையை நடத்திய பேராசிரியர் நினா அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கிறோம். ♠

*****

## பயிற்சிப்பட்டறையில் நான் பயின்றவை

***செல்வராஜ் கோட்டீஸ்வரன்***



ஆசிரியர்களுக்கான பயிற்சி மிகவும் சிறப்பாக இருந்தது. அதில் கற்ற விடயங்கள் எனது மனதில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நான் ஏன் தமிழ்ப்பள்ளிக்கு வருகிறேன்? வருவதன் நோக்கத்தை முறையாக நிறைவேற்றுகிறேனா? என்று என்னையே நான் கேட்டுக்கொள்கிறேன். விடைகளைத் தேடி அலைகிறேன். என் மனதில் பதிந்தவற்றை ஏனைய ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொண்டால் நமது பள்ளி சிறப்பாக வளரும் என்ற நம்பிக்கை மனதில் தோன்றியது. இதழாசிரியரும் என்னை எழுத ஊக்கப்படுத்தினார். இந்த பட்டறையில் கலந்துகொண்டுவிட்டு வீடு திரும்பிய பின்னும் என் மனதில் நிற்கும் ஐந்து முக்கிய விடயங்களை மட்டும் இங்கு கூறுகிறேன்.

### பேச்சு தமிழ் மற்றும் உரை நடை தமிழ்

பெரும்பாலான மாணவர்கள் தமிழில் சொற்றொடர் அமைக்க மிகவும் சிரமப்படுகிறார்கள் என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. மாணவர்கள் பேச்சுத்தமிழில் உள்ள சொற்களை கொண்டே சொற்றொடர் அமைக்க முற்படுகிறார்கள். இதை தவிர்க்க பேராசிரியர் நீனா நமஸ்தே தனது அறிவுரையில்; ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுடன் சேர்ந்து அவர்கள் பயன்படுத்தும் பேச்சு தமிழ் சொற்களுக்கு இணையான உரை நடை தமிழ்

சொற்களுக்கான பட்டியலொன்றைத் தயார் செய்து பயிற்சி செய்வதன் மூலம் பயனடையலாம் என்றார். எடுத்துக்காட்டாக 'தங்கச்சி' என்பதன் உரை நடை தமிழ்ச் சொல் 'தங்கை' என்பது போன்று பட்டியலொன்றைத் தயார் செய்யலாம்.

## *நமது தமிழ் மொழி கல்வியில் கூடுதல் மதிப்பீடாகச் சேர்க்க வேண்டியவை*

நாம் சமூக நீதி சார்ந்த விடயங்களை தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் கற்பிக்கலாம். எடுத்துக்காட்டாக தமிழ் மருத்துவ முறைகளின் முக்கியத்துவத்தை, நமது மண் சார்ந்த மற்றும் வீட்டு மருத்துவ முறைகளின் நன்மைகளை, சில எளிமையான எடுத்துக்காட்டுகளுடன் விளக்கலாம். இதேபோன்று எமது இனம்சார்ந்த ஏனைய பண்பாடுகளின் முக்கியத்துவத்தையும் விளக்கலாம்.

## *மாணவர்களை ஊக்குவித்தலின் முக்கியத்துவம்*

மாணவர்களை ஊக்குவிப்பதின் மூலம், அவர்களின் கற்றல் திறன் மேலும் வளர நாம் உதவலாம். நாம் கூடுதலாக ஆர்வமுள்ள, கற்பிக்கும் பாட சம்பந்தப்பட்ட விடயங்கள் மற்றும் எளிய அணி சார்ந்த விளையாட்டுகளுடன் கூடிய வெகுமதிகள் அளிக்கலாம். இவை மாணவர்களின் ஆர்வத்தை தூண்டுவதுடன் அவர்கள் அணியாக சேர்ந்து கற்கும் முறையையும் மற்றும் அவர்களின் தமிழ் விவாதங்களுக்கு நம்பிக்கையையும் கொடுக்கும். இதனுடன் மாணவர்கள் தமிழ்க் கல்வியைத் தவிர்த்து அவர்களுக்குள் குறைந்தது 5 - 10 நிமிடங்களாவது தங்களின் சொந்த நிகழ்வுகளைத் தமிழில் பேச அனுமதிக்க வேண்டும். இவ்வாறு செய்வதின் மூலம் அவர்கள் பாட நேரத்தில், அவர்களின் முழுக் கவனத்தையும் கற்றலில் செலுத்த வாய்ப்புகள் அதிகமாகும் என்று நான் நம்புகிறேன்.

## *நான் எதற்காக ஆசிரியராக உள்ளேன்*

நான் தமிழ் கற்பிக்க வருகிறேன் என்றால் நான் ஏதோ ஒரு இலக்குடன் தான் வருகிறேன் அல்லவா? என் மாணவர்களின் வாழ்க்கையில் உண்மையான மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் என் இலக்காக கொண்டுள்ளேன். மாணவர்களுடன் இருக்கும் ஒவ்வொரு வாரத்திற்க்காகவும் நான் என்னை தயார்படுத்திக்கொள்வது மிக அவசியம். நான் அவர்களின் கல்விக்காக என்னை தயார்ப்படுத்துவது, அவர்களுக்குச் சிறந்த கல்வியையும், அத்துடன் அவர்கள் சோர்வின்றி வகுப்பிற்கு வரும் ஊக்கத்தையும் கொடுக்கும். ஆசிரியர் முறையாக ஆயத்தமாகி வந்துள்ளார் என்ற எண்ணம் மாணவர் மனதில் தோன்ற வேண்டும். அப்போதுதான் அவர்களும் கவனமாகப் படிப்பார்கள்.

## *கைப்பேசியைப் பயன்பாடுத்தலாமா*

மாணவர்களும் ஆசிரியர்களும் வகுப்பறையில் எப்பொழுது கைப்பேசியை பயன்படுத்த வேண்டும் என்று வரையறுத்திருக்க வேண்டும். ஆசிரியர்கள் கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களைக் கற்பிக்க மட்டும் பயன்படுத்தலாம். அதை தவிர்த்து தங்களின் தேவைகளுக்குப் பயன்படுத்துவது மாணவர்களும் வகுப்பறையில் கைப்பேசியைப் பயன்படுத்த வழி வகுக்கும். ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்கு, அவர்கள் கைப்பேசியை வகுப்பறையில் பயன்படுத்துவதால் எவ்வாறு அது ஆசிரியர்களின் கவனத்தையும் மற்ற

மாணவர்களின் கவனத்தையும் சிதற வைக்கும் என்று தெளிவு படுத்த வேண்டும்.

இந்த பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட சக ஆசிரியர்களுக்கும் இந்த விடயங்கள் மனதில் தோன்றியிருக்கும். இது இவ்வாறு எழுத்தில் இருக்கும் போது திரும்பத் திரும்ப படித்து மனதில் நிறுத்தலாம். ♠

*****

## ஆசிரியர்களுக்கான முதலாவது துறைசார் பயிற்சிப் பட்டறை

***கலாநிதி. நாகலிங்கம் சிவயோகன்***
***இதழாசிரியர்***



எமது ஆசிரியர்களுக்கான முதலாவது பயிற்சிப்பட்டறையானது 04.04.2015 அன்று லேக் வீலர் பூங்காவில் நடைபெற்றது. அன்றய தினம் கேரோலினா தமிழ்ச்சஙகமும் தமது சித்திரை விழாவை அங்கு நடத்தியதால் தமிழ்ப்பள்ளியும் அதே நாளிலேயே அங்கேயே பயிற்சிப்பட்டறையையும் நடத்தியது. அன்றைய பயிற்சிப்பட்டறையானது ஈலோன் பல்கலைக்கழகத்தின் கல்வித்துறைப் பேராசிரியையான ரெறி ரொமசெக் என்பவரால் நடத்தப்பட்டது.

அன்றைய பயிற்சிப்பட்டறையில் அவர் பலவிதமான விடயங்களை முன்வைத்தார். முதலில் அமெரிக்க நாட்டினதும், மாநிலத்தினதும் தொழில்சார் கற்பித்தல் தரநிலை பற்றி விவாதித்தார். பின்னர் இதேபோன்று மொழி கற்பித்தலில் உள்ள தரநிலைகளையும் விவாதித்தார். இத் தரநிலைகளை எமது பாடத்திட்டத்தில் எவ்வாறு சேர்க்கலாம் என்பதைப் பற்றி ஆசிரியர்களும் தமது கருத்தை பகிர்ந்து கொண்டனர். அதன்பின் அவர் மாணவர்களை எவ்வாறு தரப்படுத்தலாம் என்பதைப் பற்றியும் விவாதித்தார். தரப்படுத்தலுக்கான வேவ்வேறு முறைகளையும், எவ்வாறு ஆசிரியர்கள் அவற்றைப் பயன்படுத்தித் தமது கற்பித்தலை மெருகூட்டலாம் என்பதைப் பற்றியும் பலவிதமான கருத்துக்களை முன்வைத்தார்.

இந்தப் பயிற்சிப்பட்டறை மிகவும் பயனுள்ளதாக அமைந்ததோடு, பல ஆசிரியர்கள் பயிற்சிப்பட்டறையில் கற்றவற்றைத் தமது வகுப்புகளில் பிரயோகித்து மாணவர்களின் கற்றல்ச் செயற்பாட்டை முன்னேற்றினர். பேராசிரியை ரெறி ரொமசெக் அவர்களிற்கு, பள்ளி தனது நன்றியை இச் செய்தியிதழின் ஊடாகத் தெரிவிக்கிறது. இப்பயிற்சிப்பட்டறையின் ஒளிப்பதிவைப் பின்வரும் இணைப்பில் பார்வையிடலாம். இப் பயிற்சி சம்பந்தமான மேலதிக தகவல்கள் தேவைப்படுபவர்கள் பள்ளி முதல்வரை அல்லது இதழாசிரியரைத் தொடர்புகொள்ளலாம். ♠

**https://www.youtube.com/watch?v=Yi5chSvrzeE**

*****

## *மழலை வகுப்பு செய்திகள்*

மூன்றாம் பருவத்தில் குழந்தைகளுக்கு "அ" முதல் "ஔ" வரையிலான உயிர் எழுத்துக்களையும், ஆய்த எழுத்தான ஃ இனையும் கற்பித்து, அதற்கான பயிற்சித் தாள்களை வகுப்பிலும், வீட்டுப்பாடமாகவும் கொடுத்தோம். தாத்தா, பாட்டி, அத்தை, மாமா என்ற உறவுகளை "குடும்ப மரம்" திட்டப்பணி மூலமாக குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்தோம். கடிகாரம், மோட்டார், மற்றும் கண்ணன் பாடல்களை பாடினோம். சிங்கம், புலி, யானை, மற்றும் ஒட்டகச்சிவிங்கி போன்ற விலங்குகளைப் படத்தைக் காண்பித்துக் கற்றுக்கொடுத்தோம். நரி, எலும்பு, மற்றும் எலி கதைகளைக் கூறினோம். குழந்தைகள் ஆர்வமாகக் கவனித்துக் கற்றார்கள். ♠

*****

## *வகுப்பு 1 செய்திகள்*

இந்த மூன்றாம் பருவத்தில், எங்கள் வகுப்புக் குழந்தைகளை அடுத்த நிலை 1 அ இற்கு ஏற்றவாறு தயார் செய்வதில் கவனம் செலுத்துகிறோம். உயிர் எழுத்துக்கள் மற்றும் மெய் எழுத்துக்களைச் சேர்த்து உயிர்மெய் எழுத்துக்களை உருவாக்கவும் மாணவர்கள் கற்றுக் கொள்ள ஆரம்பித்துள்ளார்கள். க் +அ = க இந்த முறைப்படி கற்பதால், குழந்தைகளுக்கு புரிந்து கொள்வது எளிமையாக உள்ளது. அவர்கள் கற்றுக்கொண்ட எழுத்துக்களை (க, ந, ப) வைத்து சில சிறு சொற்களையும் (அம்மா, பழம்) படித்து தெரிந்து கொண்டார்கள். இறுதித் தேர்வில் இந்த சொற்களை உள்ளடக்கிய சில கேள்விகளையும் கேட்டுள்ளோம். இது, மாணவர்களின் அடுத்த நிலை 1 அ இற்கு ஒரு வலுவான அடிப்படையினை அமைத்துக் கொடுக்கும் என்று நம்புகிறோம். மாணவர்களின் தமிழ் பேசும் திறனை வளர்க்கும் விதமாக புதிய பாடல்கள், வார நாட்களின் மற்றும் பண்டிகைகளின் பெயர்களையும் கற்றுக் கொடுத்துள்ளோம். மேலும் வகுப்பில் அவர்களுக்கு பிடித்த தலைப்பு குறித்து குறைந்தது ஐந்து சொற்றொடர்களாவது பேசுவதற்கு ஆசிரியர்கள் மிகுந்த ஊக்கம் அளிக்கிறார்கள். புதிய பாடங்களைக் கற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாமல், முதல் இரண்டு பருவத்தில் கற்ற எல்லாப் பாடங்களையும் திரும்பப் படிக்க வகுப்பில் அதிக நேரம் ஒதுக்கியுள்ளோம். சுருக்கமாக சொல்வதென்றால் இந்த நிலை (வகுப்பு 1), உயிர், மெய், மற்றும் உயிர்மெய் எழுத்துக்கள் கற்பதற்கும் சொற்கள் கற்பதற்கும் ஒரு நல்ல அடித்தளத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். ♠

*****

## *வகுப்பு 1 அ செய்திகள்*

வகுப்பு 1 அ இல் நாம் மாணவர்களுக்கு மெய் எழுத்துக்கள் 18 இன் முதல் இரண்டு வரிசை உயிர்மெய் எழுத்துக்களை எழுதவும், மற்றும் படிக்கவும் கற்றுக் கொடுத்தோம் (க் + அ = க மற்றும் க் + ஆ = கா போன்று). அத்துடன் 5 சொற்களுக்கு ஒருமை பன்மையும் கற்றுக் கொடுத்தோம். மேலும் 60 தமிழ்ச் சொற்களைப் புரிந்து எழுதவும், படிக்கவும் பயிற்சிகள் கொடுத்தோம். வாய் மூலம் இரண்டு அல்லது மூன்று சொற்களுள்ள 30 சொற்றொடர்களும் கற்றுக் கொடுத்தோம்.

இவற்றிற்கும் மேலாக, நான்கு தமிழ்ச் சிறுவர் பாடல்களையும் இசையுடன் கற்றுக் கொடுத்தோம். ♠

*****

## வகுப்பு 1 ஆ செய்திகள்

வகுப்பு 1 ஆ இல், மூன்றாம் பருவத்தில், மீதமுள்ள பாடநூல், அதாவது பாடங்கள் 11 முதல் 14 வரையும், மற்றும் பயிற்சிநூலில் உள்ள பாடங்களையும் கற்பித்தோம். உயிர்மெய் எழுத்துக்களில் "ஒ" முதல் "ஔ" வரிசை வரை உள்ள உயிர்மெய் எழுத்துக்கள் முழுவதும் கற்பிக்கப்பட்டது. அதன் பின் இதுவரை பயின்ற அனைத்து எழுத்துக்களும் மீண்டும் ஒரு முறை கற்பிக்கப்பட்டது, மாணவர்கள் இந்த உயிர்மெய் எழுத்துக்களை நன்றாக அறிய மற்றும் தெளிவாக உச்சரிக்க முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

இலக்கணத்தில் புதிதாக குறில் மற்றும் நெடில் அறிமுகப்படுத்தியுள்ளோம். குறில் நெடில் என்றால் என்ன? உயிர் எழுத்துக்களில் குறில் நெடில் எழுத்துக்கள் யாவை? என்றும், அவற்றின் ஒலி வேறுபாட்டையும், அவை சார்ந்து வரும் சொற்கள் பற்றியும் கற்றுக் கொடுக்கப்பட்டது. மேலும் மூன்றாம் பருவத்தில், புதிய இரண்டு திருக்குறள்கள் பொருளுடன் கற்றுக்கொடுத்துள்ளோம்.

இவை அனைத்தும் இறுதித் தவணையில் குழந்தைகளுக்கு எளிய முறையில் கதை, பாடல் மற்றும் சில பல ஆர்வமூட்டும் முறைகள் கொண்டு எங்கள் 1 ஆ ஆசிரியர்கள் கற்பித்துள்ளனர். ♠

*****

## வகுப்பு 2 அ செய்திகள்

மூன்றாம் பருவத்தில், 2 அ மாணவர்கள் குடும்பம், பல்வேறு உறவுகள் மற்றும் சமுதாயம், அதில் உள்ள பணிகள் ஆகியன பற்றிக் கற்றுக்கொண்டனர். அது தவிர மாணவர்களுக்குச் சொற்களை வைத்துச் சொற்றோடர்கள் எழுத முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. உயிரினங்களின் ஒலிகள் பற்றியும், அதற்கு தகுந்த சரியான தமிழ்ச் சொற்களைத் தேர்வு செய்வதின் முக்கியதுவத்தைப் பற்றியும் கலைந்துரையாடப்பட்டது.

இது இந்த ஆண்டின் கடைசிப் பருவம் என்பதால், மாணவர்களுக்கு இது வரை கற்று கொடுக்கப்பட்ட பாடங்கள், பயிற்சிகள், சொற்கள், பாடல்கள் மற்றும் கதைகள் மீளாய்வு செய்யப்பட்டது. மாணவர்களும் ஆர்வமாக சீர்ஆய்வு செய்து கொண்டனர். 2 அ வகுப்பு ஆசிரியர்களாகிய ஆகிய நாங்கள், எங்களது அனைத்து மாணவர்களும் தமது அடுத்த நிலைக்கு தங்களை நன்றாகத் தயார் செய்து கொண்டுள்ளனர் என்று மிகுந்த உறுதியாகவும் மகிழ்ச்சியாகவும் தெரிவித்துக் கொள்வதில் பெருமை படுகிறோம். எங்களுக்கு உதவிய பெற்றோர்களுக்கு மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ♠

*****

## வகுப்பு 2 ஆ செய்திகள்

இந்த மூன்றாம் பருவத்தில் எமது 2 ஆ வகுப்பில், மாணவர்களின் வாசிப்பு திறனை வளர்க்கும் பொருட்டு, நூலகப் புத்தகங்களை வகுப்பிலும் ,வீட்டிலும் தவறாமல் படிக்கச்

செய்தோம். மேலும் பண்புள்ள குடிமக்கள் புத்தகத்தில் உள்ள கதைகளையும் அவர்கள் படித்து புரிந்து கொண்டார்கள். சில திருக்குறள்களும் கற்றுக் கொண்டார்கள். பாடநூல் மற்றும் பயிற்சிநூலில் உள்ள பகுதிகளையும் சொல்லிக் கொடுத்தோம். சொற்றொடர்கள் அமைப்பது, ஒரு தலைப்பு குறித்து ஐந்து வரிகளுக்கு மிகாமல் எழுதுவது போன்ற பயிற்சிகளையும் மாணவர்கள் மேற்கொண்டார்கள். இந்த வருடத் தொடக்கத்தில் எளிமையான சொற்கள் கற்க ஆரம்பித்து, இப்போது சொற்றொடர்கள் மற்றும் சிறு கட்டுரை எழுதுகிற அளவிற்கு எமது வகுப்பு மாணவர்கள் முன்னேற்றம் அடைந்து உள்ளார்கள் என்பதை அனைத்து 2 ஆ ஆசிரியர்களின் சார்பிலும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் வகுப்பு மாணவர்கள் தமிழ் மொழியினை தொடர்ந்து கற்க வேண்டும் என்று வாழ்த்துகிறோம். ♠

*****

## வகுப்பு 3 அ செய்திகள்

வகுப்பு 3 அ இல் பாடநூலின் பக்கம் 50 முதல் இறுதிப் பக்கமான 70 வரையிலும் பயிற்சிநூலின் பக்கம் 46 முதல் 74 வரையிலும் கற்பித்து பாடத்திட்டத்தை முடித்தோம். பண்புள்ள குடிமக்கள் நூலில் இருந்து மேலும் 4 பாடங்களைக் கற்பித்தோம். இவற்றைவிட ஆத்திசூடியில் "உடையது விளம்பேல்", "ஊக்கமது கைவிடேல்" போன்றவற்றையும் அவற்றின் பொருள்களுடன் அவற்றிற்குப் பொருத்தமாக கதைகளையும் கூறினோம். மேற்கொண்டு இலக்கணம் கற்பித்தலை நிறுத்தியிருந்தோம். ஆயினும் சுட்டுப் பெயர்கள், வினாச்சொற்கள் போன்றவற்றை கற்பித்து எமது திட்டமிடப்பட்ட கற்றல் செயல்பாடுகளை முடித்தோம். இந்தப் பருவத்தில் மேலதிகமாகத் திருக்குறள் எதுவும் கற்பிக்கப்படவில்லை. மாணவரின் வீடு, அயலவர் வீடு, பிடித்த விளையாட்டு, மற்றும் பிறந்தநாள் கொண்டாட்டம் போன்றவற்றைப் பற்றி கட்டுரைகளும் எழுதப் பழகினார்கள். இறுதி மூன்று வாரங்கள் மீட்டல் பயிற்சிகளும், மாணவரிடையே வினாடிவினா போட்டிகளையும் நடத்தினோம். அது மாணவர்களை ஊக்கப்படுத்தியது. மாணவர்கள் அடுத்த நிலைக்குச் செல்வதற்குத் தேவையான தமிழ் அறிவைச் சிறந்த முறையில் வழங்கியுள்ளதாக நாம் நம்புகிறோம். ♠

*****

## வகுப்பு 3 ஆ செய்திகள்

நாம் இந்த கல்வி ஆண்டின் இறுதி பருவத்தில் உள்ளோம் என்பதை நம்ப முடியவில்லை. எங்கள் 3 ஆ வகுப்பில் ஆசிரியர்களும், மாணவர்களும் சேர்ந்து தமிழ் கற்றுக் கொண்டதில் நேரம் சென்றதே தெரியவில்லை. பாடத்திட்டத்தில் உள்ள அனைத்து பாடங்களையும் சொல்லிக் கொடுத்துவிட்டோம். மேலும், இறுதித் தேர்வை முன்னிட்டு எல்லா பாடங்களையும் திரும்பப் படிக்க ஆரம்பித்து விட்டோம். எங்கள் வகுப்பில் மாணவர்கள் சரளமாக தமிழ் பேசுவதிலும், தவறில்லாமல் தமிழ் எழுதுவதிலும் இந்த வருடம் முழுவதும் கவனம் செலுத்தினோம். ஒவ்வொரு வாரமும் வகுப்பின் இறுதியில் மாணவர்களுக்கு மிகவும் பிடித்த "தமிழ் சொற்கள்"

விளையாட்டு நடைபெறும். எங்கள் மாணவர்கள் தமிழ் மொழியை சில விளையாட்டு வழிகளில் கற்றுக் கொள்கிறார்கள். அத்துடன் சக மாணவர்களுடன் குழுவாக சேர்ந்து விளையாடும் போது மிகுந்த திறமையையும் வெளிப்படுத்துகிறார்கள்.

ஔவையார் எழுதிய ஆத்திச்சூடியை மாணவர்களுக்கு எளிமையாக விளங்கும்படி அதன் பொருளுடன் கற்றுக் கொடுத்தோம். மேலும் ஆத்திச்சூடியை அடிப்டையாகக் கொண்டு அவர்களின் அன்றாட வாழ்வில் நேர்ந்த அனுபவங்களையும் வகுப்பில் கேட்டுத் தெரிந்து கொண்டோம். எங்கள் வகுப்பின் ஆசிரியர்கள் மூவரும் மாணவர்கள் தமிழ் கற்கத் தூண்டு கோலாக இருந்தார்கள். எங்கள் வகுப்பு மாணவர்களை மிகச் சிறந்த மாணவர்களாக மாற்றியுள்ளோம் என்று ஆசிரியர்களான நாங்கள் நம்புகிறோம். மாணவர்கள் அனைவரும் நமது கேரி தமிழ் பள்ளியில் தொடர்ந்து தமிழ் பயில நாங்கள் மனமார வாழ்த்துகிறோம். ♠

*****

## வகுப்பு 4 அ செய்திகள்

தவிர்க்க முடியாத காரணத்தால் வகுப்பு 4 அ செய்திகள் இம் மலரில் இடம்பெறவில்லை. ♠

*****

## வகுப்பு 4 ஆ செய்திகள்

இந்த காலாண்டில், வகுப்பு 4 ஆ மாணவர்கள் பல புதுத் தமிழ்ச் சொற்றொடர்களையும் அவற்றின் பயன்பாட்டையும் கற்றுக்கொண்டார்கள். அவற்றை சொற்றொடரில் அமைக்கவும், பத்தியில் அமைத்து எழுதவும் பழகினார்கள். இலக்கணத்தில், அதனால், மற்றும் ஆனால் ஆகிய சொற்களின் பயன்பாட்டையும், எடுத்துக்காட்டு உவமை அணி, மற்றும் இல் பொருள் உவமை அணி ஆகியவற்றைப் பற்றியும் படித்தார்கள். மேலும் அடுக்குத்தொடர் மற்றும் இரட்டைக்கிளவி ஆகியவற்றையும் மறுமுறை நினைவு கூர்ந்தார்கள்.

இலக்கியத்தில்; வெற்றிவேற்கை, மற்றும் பழமொழி ஆகியவற்றுடன், 5 புதிய திருக்குறள்களும் பயின்றனர். இவற்றின் வாழ்வியல் பயன்பாட்டைப் பற்றித் தெரிந்து கொண்டனர். பண்புள்ள குடிமக்கள் புத்தகத்தில் அனைத்து பாடங்களையும் பயின்றனர்.

இறுதித் தேர்வுக்கான பயிற்சிகளில், கடைசி வாரத்தில் ஈடுபட்டனர். எங்கள் மாணவர்கள் இறுதி தேர்வுக்கு மட்டும் அல்லாமல் அடுத்த வகுப்பு நிலைக்கும் தயாராக உள்ளனர். இந்த வகுப்பு மாணவர்கள் பொறுமையுடனும், பொறுப்புடனும் நன்கு பாடங்களை கற்றுத் தேர்ந்துள்ளனர். அடுத்த வகுப்பிலும் இவர்கள் சிறந்து விளங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் இந்த ஆண்டுக்கு விடை கொடுக்கிறோம். ♠

*****

## வகுப்பு 5 அ செய்திகள்

தவிர்க்க முடியாத காரணத்தால் வகுப்பு 5 அ செய்திகள் இம் மலரில் இடம்பெறவில்லை. ♠

*****

## வகுப்பு 5 ஆ செய்திகள்

வகுப்பு 5 ஆ இல் மாணவர்கள் தங்களுடைய சொல்வளத்தைப் பெருக்கிக் கொள்ள, பாடநூல் மட்டுமல்லாது கதைப் புத்தகம், மற்றும் பண்புள்ள குடிமக்கள் போன்ற புத்தகங்களையும் அன்றாடம் படித்தார்கள். அதனால் வேகமாகவும், அதிக பிழையின்றியும் அவர்களால் படிக்க முடிகிறது. வீட்டுப்பாடத்தில் சொற்றொடர்கள் அமைக்கும் பயிற்சி கிடைப்பதால், கொடுக்கப்பட்ட சொற்களுக்கு ஆகக் குறைந்தது 5 சொற்களாவது கொண்ட சொற்றொடர்களை அமைக்கப் பழகியுள்ளனர். தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கும் மொழிபெயர்ப்பு செய்ய கற்றுக்கொண்டனர். வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களைத் திருக்குறள், ஆத்திச்சூடி, மற்றும் பழமொழிகள் மூலம் கற்றுக் கொண்டார்கள். உதாரணமாக, சினத்தை அடக்குவதின் முக்கியத்துவம், மற்றும் இனிமையாக பேசுதல் போன்றவற்றின் நன்மை, தீமைகளை உணர்ந்தார்கள் தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள் சிலவற்றைப் பயிற்சி செய்தோம். 5 ஆ மணவர்கள் இந்த ஆண்டு இறுதியில் நிச்சயமாக 5 ஆ நிலைக்குத் தேவையான தமிழ் மொழித் திறனைக் கொண்டிருப்பர்கள் என்று நம்புகிறேன். ♠

*****

## வகுப்பு 6 அ செய்திகள்

வகுப்பு 6 அ மாணவர்கள் இந்த ஆண்டின் இறுதிப்பருவத்தில் பாடநூலின் கடைசித் தொகுதியில், ”நம்ப முடியாத அதிசயக் கதைகள்” என்ற கருப்பொருளில் பாடம் பயின்றார்கள். ஒலி வேறுபாட்டுச் சொற்கள், பழமொழிகள் மற்றும் திருக்குறள்கள் ஆகியவை பாடப்புத்தகத்திலிருந்து கற்பிக்கப்பட்டன. பயிற்சி நூலிலிருந்து பாடம் சார்ந்த பயிற்சிகளை மாணவர்கள் செய்தார்கள். இந்த வகுப்பில் மாணவர்கள் தங்களுக்கு பிடித்த தலைப்பை பற்றி தமிழில் உரையாட ஊக்குவிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு தமிழர் கலாச்சாரமும் கற்பிக்கப்பட்டது. ♠

*****

## வகுப்பு 6 ஆ செய்திகள்

தவிர்க்க முடியாத காரணத்தால் வகுப்பு 6 ஆ செய்திகள் இம் மலரில் இடம்பெறவில்லை. ♠

*****

## முறைசாராத் தமிழ் வகுப்பு

இந்தச் சிறப்பு வகுப்பானது வயது அதிகமானபின் தமிழ் படிக்க விரும்புபவர்களுக்காகவும், தமிழ் கற்க விரும்பும் வேற்று இன மக்களுக்காகவும் ஆரம்பிக்கப்பட்டது. எனவே இவ் வகுப்பில் கற்க வருபவர்கள் பலவிதமான நோக்கத்துடனும், பலவிதமான நிலைகளிலும் இருப்பார்கள். எனவே இவர்களுக்கென்று நிலையான பாடத்திட்டத்தை வகுக்க முடியாது. ஒவ்வொருவரினது தேவைக்கும் ஆர்வத்திற்கும் ஏற்ப கற்பிக்க வேண்டும். இதுவரை, தமிழரை மணம் முடித்த வேற்று இனத்தவரும், தமது மேற்படிப்பிற்காக இலங்கைக்குச் செல்லவுள்ள ஈலோன் பல்கலைக்கழக மாணவர்களும் வந்தார்கள்.

இவர்களின் தேவைகள் வேறு வேறானவை. நாம் அவற்றிற்குத் தகுந்த மாதிரி கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டோம்.

ஆயினும் நாம் எமது பாடசாலையால் அங்கீகரிக்கப்பட்ட புத்தகத்தையும், வேறு சில இலக்கணப் புத்தகங்களையும் பயன்படுத்தினோம். இவர்கள் வயதில் பெரியவர்கள் ஆகையால் இவர்களின் கற்றல் வேகம் அதிகமாகும். நாம் சில வேளைகளில், ஏனைய மாணவர்கள் நான்கு வருடங்களில் கற்பதை ஆறு மாதங்களுக்குள் முடித்துவிடுவோம். சில மாணவர்கள் விரைவாக எழுத்துக்களை கற்று எதனையும் வாசிக்கக் கற்றுவிடுகிறார்கள். இவர்களுக்கு பேச்சுப் பயிற்சிக்காக வேறு சில ஆசிரியர்களும் அவ்வப்போது இணைந்து கற்பிக்க வருவார்கள். அத்துடன் இவர்கள் பெரும்பாலும் வேலை செய்து கொண்டிருப்பதால் வகுப்புகளுக்கு ஒழுங்காக வருவதும் சிரமமாகும். எனவே வகுப்புகளும் அதற்கேற்றமாதிரி நடத்தப்பட்டு வருகிறது.

இவர்களில் சிலரிடம் சிறந்த முன்னேற்றத்தையும் சிலரிடம் குறைந்தளவு முன்னேற்றத்தையும் காணமுடிந்தது. இவர்களுக்கு கற்பிப்பது ஒரு போராட்டம் என்றாலும், அது மிகவும் இனிமையான அனுபவமாகவும் இருந்தது. ♠

*****

~~~★~~★~~★~~~

## கேரி தமிழ்ப்பள்ளி

**வடகேரொலைனா, அமெரிக்கா**

© கேரி தமிழ்ப்பள்ளி, 2016 -2017

~~★~~★~~★~~~

***செய்தியிதழ்க் குழு 2016 -2017***



**இடமிருந்து வலமாக**


*முனைவர். காசி அழகானந்தம், திரு. தி. வெ. ராமசுப்ரமணியன், திரு. அசோக் நாகராஜன், முனைவர். இளங்கோவன் கோபால், கலாநிதி. நாகலிங்கம் சிவயோகன், திரு. செல்வன் பச்சமுத்து, திருமதி. விஜயலட்சுமி செல்வக்குமார், திருமதி. சர்மிளா குமார், திருமதி. இரம்யா வரதராஜன்*
~~~

## தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் குழு 2016 - 2017



## அங்கீகாரம் பெறும் மகிழ்ச்சியான கணங்கள் 04.26.2015






## ஆசிரியர்களுக்கான விருந்துபசாரம் 2016 - 2017





பேராசிரியர் நினா பயிற்சிப்பட்டறையின் பின் பள்ளி முதல்வர் மற்றும் இதழாசிரியருடன் விருந்துண்ணல்



பேராசிரியர் ரெறி முந்நாள் பள்ளி முதல்வருடன் பயிற்சிப்பட்டறையின் முன் உணவருந்துதல்




திரு. தர்மர் வகுப்பறை அவதானிப்பை ஆசிரியர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்



பிரிந்து செல்கிறார் திருமதி. சித்ரா பாஸ்கரன். தமிழ்ப்பள்ளி ஆசிரியை 2010 - 2017



பயிற்சிப்பட்டறையில் சில கணங்கள்









